நீதிமன்ற ஆணைகளை மறைத்து தவறான தகவலைப் பரப்பிய

# அறப்போர் இயக்கம் மீது மான நஷ்ட வழக்கு!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் சார்பில் நோட்டீஸ்!

சென்னை, அக்.24-

“நீதிமன்ற ஆணைகளை மறைத்து தவறான தகவலைப் பரப்பிய அறப்போர் இயக்கம் மீது மான நஷ்ட ஈடு வழக்குத் தொடரப்படும்”என்று பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது வழக்கறிஞர் எஸ்.சரவணகுமார் அனுப்பியுள்ள நோட்டீஸ் வருமாறு:

1991ல் டெக்கான் ஃபன் ஐலேண்டு & ஹோட்டல் லிமிடெட் தன் நிறுவனத்தின் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்களை 1992 ம் ஆண்டு நீதிமன்ற உத்தரவின் (O.S. No.3714 of 1992) மூலம் இது அரசு நிலம் அல்ல தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான இடம் என்று உறுதி செய்தது. அதனை எதிர்த்து 1994ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. (864/1994) அந்த தீர்ப்பினை 23 ஆண்டுகள் வழக்கு நடைபெற்று 2017ம் ஆண்டு அந்த வழக்கில் நிறுவனத்திற்கு சாதகமாக சென்னை உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த தீர்ப்பின் அடிப்படையிலும் நீதி மன்ற உத்தரவு படியும் இந்த நிறுவனம் முறையாக செயல்பட்டு வருகிறது. இது தனியார் நிறுவனம் இந்த நிறுவனத்தில் பல்வேறு தரப்பினர் உறுப்பினர்களாக உள்ளனர் மேலும் இந்த நிறுவனம் பல ஆண்டுகளாக அமைச்சர் தரப்பினர் உறுப்பினர்களாக இருந்தனர் என்பதன் காரணமாக அந்த காழ்ப்புணர்ச்சியை காட்டுவதற்காக தற்போது அவதூறான செய்தியை பரப்பி நீதிமன்ற ஆணைகளை மறைத்து புறம் பேசி தவறான தகவலை பகிரங்கமாக தெரிவித்ததற்கு நீதிமன்ற நடவடிக்கை எடுக்க இருக்கின்ற சூழலில் இதனுடைய விவரத்தை கீழ்கண்டவாறு தெரிவிக்கிறோம்

இந்த நிறுவனத்தின் சட்ட ஆலோசகர் என்ற முறையில் நிறுவனத்தின் மீது அவதூறு பரப்பிய நபர்கள் மீது எங்கள் நிறுவனத்தின் சார்பாக மான நஷ்ட வழக்கு தொடர்வது மட்டுமின்றி தகுந்த சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் சைதாப்பேட்டை தாலுகா சென்னை 600016 செயின்ட் தாமஸ் மௌண்ட், 12 ஜிஎஸ்டி ரோடு, சர்வே எண். 1553, 4 ஏக்கர் 26 சென்ட்ஸ் பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தினை எங்கள் நிறுவனமாகிய டெக்கான் ஃபன் ஐலேண்டு & ஹோட்டல் லிமிடெட் முந்தைய நில உரிமைதாரர்களிடமிருந்து கடந்த 1991ல் வாங்கப்பட்டது. பின்னர் அதன் அடிப்படையில் நில உரிமையை



கேனான் குடும்பத்தினர் மேற்படி சொத்தினை கிரையம் வாங்கிய வகையில் மேற்படி நிறுவனம் 35 ஆண்டுகளுக்கு மேலாக கிரைய பத்திரம் சைதாப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டதன் அடிப்படையில் தங்களது உரிமையை நிலை நாட்டியது. பின்னர் மேற்படி நிறுவனமானது (Deccan Fun Islands & Hotel Limited) செயின்ட் தாமஸ் மௌண்ட் கிராமச் சட்ட் விதியின் பிரகாரம் இதனை முதல் தபசில் சேர்க்க வேண்டும் என்றும் பின்னர் அரசு எந்த விதத்திலும் இந்த இடத்தில் நுழையக் கூடாது என்று உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும் என்று பரிகாரம் கேட்டும் மேலும் பட்டா வேண்டியும் வழக்கு அசல் எண், 3714/1992 தாக்கல் செய்யப்பட்டு 16.10. 1992 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்த தீர்ப்பில் நிறுவனத்திற்கு சாதகமாக 1912ல் ஜேம்ஸ் ஷாட் அவர்களுக்கு இக்னேஷியஸ் என்பவர் விற்பனை செய்திருப்பதாகவும் அன்றிலிருந்து இன்று வரை வேறு யார் பேரில் இருந்திருக்கிறதோ அதற்கு 100 ஆண்டுகளுக்கு மேலாக அரசு வரி கட்டியதுமின்றி மற்றும் சர்வே செட்டில்மெண்ட் நகல் மற்றும் தனியார் நிறுவனத்தின் பெயரில் உள்ள வீட்டினை மாற்றுவதற்காக செயிண்ட் தாமஸ் மௌண்ட் கன்டோன்மெண்ட் போர்டிலிருந்து 08.07.1991 ல் கொடுக்கப்பட்ட உத்தரவு அனைத்தையும் கருத்தில் கொண்டு விளம்புகை பரிகாரத்திற்கு ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மேலே குறிப்பிட்ட சர்வே எண். 1353 மேற்படி தனியார் நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில் 1994 ஆண்டு அரசால் தொடரப்பட்ட மேல்முறையீடு சென்னை உயர்நீதி மன்றத்தில் 04.09.2017 அன்று 23 ஆண்டுகள் விசாரணைக்குப் பின் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வாறு 100 ஆண்டுகளுக்கு மேலாக விற்பனை பத்திரம் பதியப் பெற்றும் பின்னர் 35 ஆண்டுகளுக்கு மேலாக நிறுவனத்தின் சுவாதீனத்திலும் கிரையப் பத்திரம் மூலமாக வாங்கப்பட்டு வரிவகைகள் செய்தும் மின் இணைப்புகள் மற்றும் நிலவரி ஆவணங்களில் சம்பந்தப்பட்ட அனைத்திலும் உரிமையை நிலைநாட்டி வரும் பட்சத்தில் முறையான வகையில் தனியார் நிறுவனத்தின் பங்கு பரிமாற்றம் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே நடைபெற்றது சட்டப்படி செயல்பாடுகள் செய்யப்பட்டன.

இவ்வாறிருக்க தவறான தகவல்களை தெரிவித்து 100 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி நிலத்திற்கு (சர்வே எண். 1353) கிரையப்பதிவுகள ஏற்பட்டு, பின்னர் 35 ஆண்டுகளுக்கு முன்பாக கிரையம் பெற்ற ஒரு தனிப்பட்ட சொத்தின் மீது வேண்டுமென்றே தவறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று இதன் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் 2015ம் ஆண்டு போடப்பட்ட ஆணை எதுவும் அதற்கு முந்தைய கிரையப் பத்திரத்தை கட்டுப்படுத்தாது. அந்த ஆணை 1912 ல் நடைபெற்ற கிரையப் பத்திரத்தை கட்டுப்படுத்தாது. எந்த ஆணையும் பேரில் பிறப்பித்த பின்பு நடைபெறும் பதிவுகளுக்கு பொருந்தும். பின் நோக்கிச் செல்லாது. எனவே இவ்வாறு தவறான தகவல்களை தெரிவித்து என்னுடைய நிறுவனத்தின் மீது அவதூறு பரப்பிய நபர்கள் மீது எங்கள் நிறுவனத்தின் சார்பாக மானநஷ்ட வழக்கு தொடர்வது மட்டுமின்றி தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த நோட்டீசில் கூறப்பட்டுள்ளது.

---

திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக

# பாக நிலை முகவர்கள்(BLA2) ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக பாக நிலை முகவர்கள் கூட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி வாரியாக மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையில் கீழ்கண்ட அட்டவணையின் படி நடைபெற உள்ளது.

| வ.எண். | தொகுதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | பூவிருந்தவல்லி | 26.10.2024 (சனிக்கிழமை) காலை 10 மணி | MKN பேலஸ், வேப்பம்பட்டு |
| 2 | ஆவடி | 27.10.2024 (ஞாயிற்றுக் கிழமை) மாலை 4 மணி | டைமண்ட் மஹால், திருமுல்லைவாயில் |

இக்கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், வி.ஜெ. சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். அதுசமயம் பூத் கமிட்டி அமைத்தல், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் உள்ளிட்ட பணிகளை மேற்பார்வையிடுவதற்காக கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நியமனம் செய்யப்பட்டுள்ள தொகுதி பார்வையாளர்களான ஆவடி தொகுதிக்கு, மாநில விளையாட்டு அணி துணைச் செயலாளர் செல்வி நிவேதா ஜெசிகா, பூவிருந்தவல்லி தொகுதிக்கு மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி.செல்வராஜ், ஆகியோர் இக்கூட்டத்தில் தொகுதி வாரியாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இக் கூட்டத்திற்கு முன்னதாக ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த், பகுதி செயலாளர் பேபி சேகர் ஆகியோர் வரவேற்பு உரையாற்றுகிறார்கள்,

இக்கூட்டத்தில் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள். கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 29.10.2024 அன்று வாக்காளர் பட்டியல் வெளியிட்டவுடன். வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகள் குறித்து, கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் - ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

---

# இந்துத்துவாவின் கதைகளும் இந்தியாவின் கதைகளும் ஒன்றுக்கொன்று எதிரானவை!

## தீக்கதிர் தலையங்கத்தில் கருத்து!

சென்னை, அக். 24-

இந்துத்துவாவின் கதைகளும் இந்தியாவின் கதைகளும் ஒன்றுக்கொன்று எதிரானவை என்று தீக்கதிர் நாளேடு (23.10.2024) தலையங்கத்தில் குறிடப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

இந்தியாவின் லட்சியக் கனவுகள் நனவாகும் வரை ஓய்வெடுக்க மாட்டேன் என்று பிரதமர் நரேந்திர மோடி தனியார் தொலைக்காட்சி சார்பில் ஞாயிறன்று தில்லியில் நடைபெற்ற சர்வ தேச மாநாட்டில் பேசும் போது கூறியுள்ளார்.

சுதந்திர இந்தியாவின் லட்சியங்கள், உன்ன தங்கள், மாண்புகள் அனைத்தையும் தகர்க்கிற வேலையைச் செய்து கொண்டு, விடுதலைப் போராட்டத்தின் விழுமியங்களை பன்மைத்தன்மை, சமத்துவம் ஆகியவற்றை சிதைத்து ஆர்எஸ்எஸ்- சின் கெடு நோக்கங்களான இந்துராஷ்டிரம், வருணாசிரமத்தை திணிக்கும் மனு ஸ்மிருதி ஆகியவற்றை கொண்டு வரத் துடித்துக் கொண்டு இப்படிப் பேச மோடியால் தான் முடியும்.

அரசியல் சட்டத்தின் முகப்புரையில் இருக்கும் மதச்சார்பின்மை, சோசலிசம் ஆகிய வற்றை நீக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றத்தில் இந்துத்துவா எண்ணம் கொண்டவர்களை வழக்குத் தொடுக்கச் செய்ததும் அதன் ஒரு பகுதி தானே. மதச்சார்பின்மை தான் அரசியல மைப்பின் கட்டமைப்பு என்று பொட்டில் அடித் தாற் போல் நீதி மன்றம் கூறியிருப்பது நாட்



தீக்கதிர்

2024 அக்.23 புதன்கிழமை

நீங்கள் ஓய்வது உறுதி!

டுக்கு நல்ல காலம்.

எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் ஓர் விலை என்று மகாகவி பாரதி பாடியதையே அண்ணல் அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்டத்தில் எதிரொலித்தார். ஆனால் சோசலிசம் என்பது நாட்டின் அனைத்து வளங்களும் வாய்ப்புகளும் அனைத்து மக்களுக்கும் சமமான முறையில் பங்கிட்டு வழங்கப்பட வேண்டும் என்பது தான் என்று உச்சநீதிமன்றம் கூறியிருப்பதற்கு மாறாகத் தானே பா.ஜ.க. கூட்டணி அரசு நடந்து கொண்டி ருக்கிறது. ஆர்எஸ்எஸ்சின் உபாசகரான அதானி யை இந்தியாவின் முதல் பெரும் பணக்காரராக ஆக்குவது; உலகப் பணக்காரர்களில் முதல் 10 இடத்துக்கு முன்னேற்றுவது என்று தானே பணி யாற்றிக் கொண்டிருக்கிறது.

சமத்துவத்தை நோக்கிய எந்த முன்னெடுப்பும் இந்துத்துவா கூட்டத்துக்கு எட்டிக்காயாக கசக்கவே செய்கிறது. அதனால் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றவும் அதற்கு ஏற்றாற்போல் ஒரே நாடு ஒரு தேர்தல் என்று கூறி ஜனாதிபதி ஆட்சி முறைக்கு வழி ஏற்படுத்தவும் முனைகிறது. இந்த நிலையில் தான் மோடி இந்தியாவின் கனவுகள் நனவாகும் வரை ஓய மாட்டேன் என்று பேசி புல்லரிக்கச் செய்கிறார்.

இந்துத்துவாவின் கனவுகளும் இந்தியாவின் கனவுகளும் ஒன்றுக்கொன்று எதிரானவை. அதனால் கடந்த தேர்தலில் பாஜகவின் தனிப் பெரும் பான்மையைப் பறித்து வாக்களித்தனர் மக்கள். உலகின் பிரசித்தி பெற்ற, நான் ஒரு கனவு காண்கி றேன் என்ற மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் போல மோடியும் பேசுகிறார். ஆனால் அவரது கனவு சமத்துவ கனவு; இவரது கனவோ அதற்கு எதிரானது. சாதி பேதம் கூறி மேல் கீழ் என வர்ணமும் வர்க்கமும் ஆக இந்திய சமூகத்தைக் கூறு போடும் உங்களது கனவு நிறைவேறாது. ஆனால் உங்களை மக்கள் ஓய்வெடுக்க வைப்பது உறுதி.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

---

அம்பத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜின் தந்தை

# வணிகர் சங்கத் தலைவர் த. இராமச்சந்திரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

சென்னை, அக். 24 -

சென்னை கிழக்கு மாவட்டம் - அம்பத்தூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜின் தந்தையும், வடசென்னை வடக்கு மாவட்ட வணிகர் சங்க தலைவருமான த.இராமச்சந்திரன் (வயது 78) அவர்கள் நேற்று 23.10.2024 இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும், அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் அன்னாரது இல்லம் சென்று இராமச்சந்திரன் உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று (24.10.2024 - வியாழன்) காலை 11 மணியளவில் கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு வில்லிவாக்கம் சிட்கோ நகரில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

---

தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

# பெரம்பலூர் மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

## தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ந.ஜெகதீஸ்வரன் அவர்கள் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நிய மிக்கப்பட்ட காரணத்தால்; பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 23 (புதன்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு ஆர்.முருகேசன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,**

**திரு. ஆர். முருகேசன்,** 1/56, வடக்கு தெரு, கைகளத்தூர் அஞ்சல், வேப்பந்தட்டை தாலுக்கா, பெரம்பலூர் மாவட்டம் - 621117. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

20 சதவிகித போனஸ் வழங்கிய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கூட்டுறவு தொ.மு.ச. நன்றி!

## மு.சண்முகம் எம்.பி. - கி.நடராஜன் - இரா.பொன்னுராம் அறிக்கை!

சென்னை, அக். 24-

தொ.மு.ச.பேரவையின் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. 5.9.2024 அன்று கூடுதல் தலைமைச்செயலாளர் கூட்டுறவு,உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜெ. இராதாகிருஷ்ணனை சந்தித்து கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து தொழிலாளர்களுக்கும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அனைவருக்கும் 20 சதவிகிதம் போனஸ் வழங்கிடகோரி வலியுறுத்தினார் .

இதனை கவனமுடன் பரிசீலித்தபின் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். அதனை ஏற்று முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள். கூட்டுறவு தொ.மு.ச.சார்பில் முதலமைச்சர், துணை முதலமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர், கூட்டுறவு,உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், கூடுதல்பதிவாளர் (நுகர்வோர் பணிகள்), தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி., பேரவைத் தலைவர் கி.நடராஜன், பேரவை துணைத் தலைவர் இரா.பொன்னுராம், மாநில மொ.வி.பண்டகசாலைகள் தொ.மு.ச.பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் ஆகியோர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூட்டுறவு தொ.மு.சங்க நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---



கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வது குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறிந்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் பெருநகர சென்னை மாநகராட்சி, அதிகாரிகள், மழை குறித்த முன்னெச்சரிக்கை எடுக்க நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தனர். இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள் இரா. செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், மண்டலம் 5 அதிகாரி திருமதி. ஃபரிதா பானு, அனைத்து அரசுத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர், மாவட்ட பகுதி, வட்ட செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

